அரசாங்க நிருவாகச் சுற்றறிக்கை இல: 353

அரசாங்க நிருவாக அமைச்சு,
சுதந்திரச் சதுக்கம்,
கொழும்பு- 07,
26, நவம்பர், 1986.

எல்லா அமைச்சுக்களின் செயலாளர்களுக்கும்,
திணைக்கள தலைவர்களுக்கும்.

அரசா உத்தியோகத்தர்களுக்கான கடன் வழங்கு சபைகள்
உறுப்பினரின் உதவுத் தொகை மீளளித்தல்

---

அரச உத்தியோகத்தர்களின் கடன் வழங்கு சபைகளின் உறுப்பினர் உதவுத் தொகைகள் மீளளிப்பதற்கு 1986 ஆம் ஆண்டு இயற்றப் பெற்ற கடன் வழங்கு சபைகள் (நீக்கல்) சட்டம் இலக்கம் 31 அதிகாரம் வளங்குகிறது. அரச உத்தியோகத்தர் களுக்கு உதவுத் தொகை மீளளிப்பதற்குரிய விதி முறைகள் கீழே தரப்பட்டுள்ளன.

நெறிப்படுத்தும் உத்தியோகத்தரின் பொறுப்புக்கள்

1. ஒவ்வொரு அமைச்சில்/திணைக்களத்திலுள்ள கடன் வழங்கு சபையின் அலுவல்களை நெறிப்படுத்தும் பொருட்டு ஒவ்வொரு அமைச்சிலும்/ திணைக்களத்திலும் ஒரு மேலதிகாரி (மூத்த உதவிச் செயலாளர்/ பிரதித்திணைக்களத் தலைவர்) நியமிக்கப்படல் வேண்டும். அவரிடம் கீழ் காணும் பொறுப்புகள் ஒப்படைக்கப்படல் வேண்டும்.

1:1 கடன் வழங்கு சபையின் வங்கி மீகுதியை காசோலை மூலம் செலுத்துதல். (6.5.85 திகதியிடப் பெற்ற கடன் வழங்கு சபை திணைக்கள சுற்றறிக்கை இல: 70)

1:2 கடன் வழங்கு சபை திணைக்களத்தின் நடைமுறைக் கணக்குடன் ஒத்து நோக்கி நெறிப்படுத்தல் (6.5.85 திகதியிடப் பெற்ற கடன் வழங்கு சபை திணைக்கள சுற்றறிக்கை இல :70 )

1:3 அங்கத்தினரின் கடன் நிலுவைகளை "அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான கடன்கள் "B" பிரிவுக்கு கைமாற்றல் (16.6.86 திகதியிடப் பெற்ற கடன் வழங்கு சபைகள் திணைக்கள சுற்றறிக்கை இல:71 & 28.10.86 திகதியிடப் பெற்ற கடன் வழங்கு சபைகள் திணைக்கள சுற்றறிக்கை இல:73, பிரிவு 2,3 உடன் வாசிக்கவும்.)

1:4. கடன் வழங்கு சபையின் பிராந்திய நிதியத்தின் சமர்ப்பிக்கப்படாத எல்லா ஆண்டிறுதிக் கணக்கறிக்கைகளையும் சமர்ப்பித்தல். ( 8.11.85 திகதியிடப் பெற்ற கடன் வழங்கு சபை திணைக்கள சுற்றறிக்கை இல: 69 பிரிவு 8.)

1:5. அமைச்சு/திணைக்களத்திலிருந்து மாற்றம் ஏற்றுச் சென்ற உத்தியோகத்தர்களின் கடன் நிலுவைகளும் ( Debtors_balances ) வேறு அமைச்சு/திணைக்களத்திலிருந்து மாற்றலாகி வந்தவர்களது கடன் நிலுவைகளும் ( Creditors balances ) அடங்கிய பட்டியல்களை தயாரித்து அனுப்புதல். (28.10.86 திகதியிடப் பெற்ற கடன் வழங்கு சபைகள் சுற்றறிக்கை இல: 73 பிரிவுகள் 4 முதல் 6 வரை ).

1:6 கடன் வழங்கு சபையின் ஆவணங்களை பாதுகாத்தல் ( 8.7.85 திகதியிடப் பெற்ற கடன் வழங்கு சபைகள் சுற்றறிக்கை இல: 69 .)

1:7 உதவுத் தொகைகள் உறுப்பினருக்கு மீளளித்தல்.

2. 1986 ஆம் ஆண்டு தைமாதம் 1 ஆம் திகதியிலும் அதன் பின்பும் அரசாங்க சேவையில் தொடர்ந்து கடமையாற்றும் <u>உத்தியோகத்தர்கட்கு உதவுத் தொகை மீளளித்தல்</u>.

**சேவையிலிருக்கும் உத்தியோகத்தர் களுக்கு மீளளிப்பு**

2:1 1.7.75 முதல் 30.4.85 வரை எந்தவொரு கடன் வழங்கு சபையிலாவது அங்கம் வகித்தவரும், 1987ஆம் ஆண்டு தைமாதம் 1-ஆம் திகதி உமது அமைச்சு/திணைக்களத்தில் தற்போது சேவையாற்றும் உத்தியோகத்தர்களின் பெயர் பட்டியலை கீழ் காணும் படிவத்தில் தயாரித்தல் வேண்டும்.

| அங்கத்தினர் பெயர். | அங்க இல. | பதவிப் பெயர் | மீளளிக்கும் தொகை | | | மீளளிக்கும் திகதி | அதிகாரமளித்த அதிகாரியின் ஒப்பம் |
|---|---|---|---|---|---|---|---|
| | | | உதவுத் தொகை | ஆதாயப் பங்கீடு | மொத்தம் | | |
| | | | | | | | |

2:2 ஒவ்வொரு உத்தியோகத்தரும் தான் 1.1.1987 இல் கடமையாற்றும் அமைச்சு/திணைக்களத்திற்கு தனது கடன் வழங்கு சபைக்கு செலுத்திய உறுப்பினர் உதவுத் தொகையை மீளளிக்குமாறு இச்சுற்றறிக்கையுடன் இணைக்கப்பட்டிருக்கும் மாதிரி படிவம் அ இல் விண்ணப்பித்தல் வேண்டும்.

2:3 ஒரு உத்தியோகத்தர். மேற்குறிப்பிட்ட திகதிக்குப் பின் மாற்றம் ஏற்று பிறிதொரு அமைச்சுக்கு/திணைக்களத்திற்கு செல்லும் பட்சத்தில், அவர் தான் பதவி ஏற்ற அமைச்சில்/திணைக்களத்தில் தனது உதவுத் தொகை மீளளிப்பை பெற உரித்துடையவராவர். ஆனால் தான் முன்பு கடமையாற்றிய காரியாலயத்திலிருந்து தனக்கு இதுவரை உதவுத் தொகை மீளளிக்கப்படவில்லை என்பதற்கு சான்றிதழொன்றைப் பெற்று சமர்ப்பித்தல் வேண்டும். அவ்வாறு சான்றிதழ் வழங்கும் பொழுது பிரிவு 2:1 குறிப்பிட்ட பட்டியலிருந்து அவர் பெயர் நீக்கப் படல் வேண்டும். அதேநேரம் இவ்வுத்தியோகத்தர் புதிதாக பதவி ஏற்கும் அமைச்சில்/திணைக்களத்திலுள்ள பட்டியலில் அவர் பெயர் பதியப்படல் வேண்டும்.

2:4 விண்ணப்பம் கிடைத்தவுடன் அமைச்சு/திணைக்களம் விண்ணப்பத்தில் குறிப்பிடப்பட்ட கடன் வழங்கு சபைகளுடன் தொடர்பு கொண்டு விண்ணப்பதாரரிடமிருந்து அறவிடப் பெற்ற உதவுத் தொகைகளின் விபரங்களை (ஒரு சத விகிதம்) கோரல் வேண்டும். இப்படிக் கோரும் கடிதங்களில் உத்தியோகத்தரின் பெயர், அங்கத்தினர் இல: பதவிப் பெயர், அறவிடப்பட்ட உதவுத் தொகையின் காலகட்டம் முதலியவற்றை தெளிவாக குறிப்பிடல் வேண்டும்.

2:5 உதவுத் தொகை அறவீடு விபரங்கள் யாவும் இச்சுற்றறிக்கையுடன் இணைக்கப் பட்டிருக்கும் மாதிரிப் படிவம் அ 1 இல் பதியப்பட்டு, நிதி ஒழுங்கு 135இன் கீழ் அதிகாரமளித்த அதிகாரியால் ஒப்பமிடப்பட்டு சான்றுப்படுத்தப்படல் வேண்டும். 23.4.85 திகதியிடப் பெற்ற அரசாங்க நிருவாகச் சுற்றறிக்கை இல:286 க்கு அமைய உறுப்பினர் உதவுத் தொகை அறவிடல் 01.05.85 உடன் நிறுத்தப்பட்டதுடன் அதன் பின் தவறுதலாக அறவிடப்பெற்ற தொகை யாவும் மீளளிக்கப்படுதல் வேண்டும். மென பிரிவு 9 ல் வேண்டப்பட்டுள்ளது. ஆகையால் 30.04.85 வரை அறவிடப்பட்ட உதவுத் தொகை மட்டுமே அ 2 படிவத்தில் பதியப்படல் வேண்டும். வழமையான ஒரு சத விகித அறவிடலுக்கு மேற்பட்ட அறவீடு ,பதிய நேரின் ( உ-ம் காலம் தாழ்ந்த வேதன உயர்வு, பதவி உயர்வால் பெறும் வேதன தேக்கம் ) அவை தகுந்த கீழ் குறிப்புடன் விளக்கி ஒப்பமிடப்படல் வேண்டும்.

2:6 அங்கத்தினர் ஒருவரிடமிருந்து அறவிடப்பட்ட உதவுத் தொகை விபரங்கள் யாவும் கிடைக்கப் பெற்றவுடன் சம்பந்தப்பட்ட அமைச்சு/திணைக்களம் அவ் உத்தியோகத்தருக்கு மீளளிக்க வேண்டிய தொகையை ( உதவுப் பணமும் ஆதாயப் பங்கீடும்) இச் சுற்றறிக்கையுடன் இணைக்கப்பட்டிருக்கும் மாதிரி படிவம் அ 3 இல் ( கணிக்கும் அட்டை ) கணித்தல் வேண்டும்.

30.04.85 க்கு பின் அறவிடப்பெற்ற தொகையும், கீழ் குறிப்புக்களுடன் விளக்கம் தரப்படாத வளமையான சத விகிதத்திற்கு மேற்பட்ட அறவீடுகளும் இக் கணிக்கும் அட்டையில் பதியப்படலாகாது. 1975 ஆம் ஆண்டு முதல் 1985 ஆம் ஆண்டு வரை வருடாந்தம் கணிக்கப்பட வேண்டிய ஆதாயப் பங்கீட்டுப் பணம் அங்கத்தினரின் வரவில் உள்ள ஆண்டிறுதி மீதத்தில், கீழ் பிரிவு 2:7 இல் தரப்பட்ட வீதங்களின் பிரகாரம் கணிக்கப்படல் வேண்டும். சுற்றறிக்கையுடன் இணைக்கப்பட்டிருக்கும் அ 3 மாதிரிப் படிவத்தில் 1975 ஆம் ஆண்டு முதல் 1978 ஆம் ஆண்டு வரை ஆதாயப் பங்கீடு கணிக்கும் வழி முறை விளக்கப்பட்டிருக்கிறது.

2:7 1975 ஆம் ஆண்டு முதல் வருடந்தோறும் செலுத்த வேண்டிய ஆதாயப் பங்கீட்டு விகிதம் கீழ் தரப்பட்டுள்ளது.

| | | |
|---|---|---|
| 1975 | - | 7.5 % |
| 1976 முதல் 1982 வரை | - | 7.2 % (வருடம் ஒன்றுக்கு) |
| 1983 ம் 1984 ம் | - | 6.0 % " |
| 1985 | - | 2.5 % ( 5%ல் பாதி ) |

2:8 சகல பதிவுகளும் கணிப்புக்களும் மற்றும் கூட்டுத் தொகை போன்றவையும் தயாரித்த வரல்லாத பிறிதொரு உத்தியோகத்தரால் பரீட்சிக்கப்படுவதுடன், தயாரித்தவரும், பரீட்சித்தவரும் தமக்குரிய இடங்களில் ஒப்பமிடல் வேண்டும்.

2:9 இம் மீளளிப்புக் கணிப்பட்டைகள் ( படிவம் அ 5 ) நிதி ஒழுங்கு 135 இன் கீழ் அதிகாரமளித்த அதிகாரியால் சான்றுப்படுத்தப்படுவதுடன் அதில் கீழ் காணும் சான்றிதழும் அடங்க வேண்டும்.

" இம் மீளளிப்பு முன்பு கொடுபடவில்லை. இக் கொடுப்பனவை நான் அங்கீகரிக்கிறேன். "

2:10 பல விண்ணப்பதாரரின் மீளளிப்புக்கள் அடங்கிய ஒரு பட்டியலோ அல்லது தனிப்பட்ட ஒரு விண்ணப்பதாரருக்கு பொது 35 படிவத்தில் ஒரு ஆணைச் சீட்டையோ தயாரிக்கப்பட்டு இவையுடன் சம்பந்தப்பட்ட அங்கத்தவர்களின் அ 1, அ 2, அ 3, படிவங்கள் இணைக்கப்படல் வேண்டும். இப்பட்டியலோ, ஆணைச்சீட்டையோ சான்றுப்படுத்தப்படமுன் உதவுத் தொகை, ஆதாயப்பங்கு கூட்டுத் தொகை, மீளளிக்கப்படும் திகதி என்பன பிரிவு 2:1 இல் குறிப்பிடப் பட்டஏட்டின் 4ம், 5ம் கூடுகளில் பதியப்படுதல் வேண்டும்.

2:11 மீளளிக்கப்பட்ட உதவுத் தொகையின் பிரமாணமும், கொடுக்கப்பட்ட திகதியும் சம்பந்தப்பட்ட உத்தியோகத்தரின் கடன் அட்டையிலும் அவரின் கோவையிலும் ( Personal file ) பதியப்படுவதுடன், இவையிரண்டும் செய்யப்பட்ட தற்கான குறியாக அவை சம்பந்தப்பட்ட பட்டியல்/ஆணைச்சீட்டையில் குறிப்புகள் எழுதப்பட்டு இவை யாவும் ஒரே பதவி நிலை உத்தியோகத்தரால் ஒப்பமிட்டு சான்றுப்படுத்தப்படல் வேண்டும்.

2:12 பட்டியல் அல்லது ஆணைச்சீட்டை கொடுப்பனவுக்காக அதிகாரமளித்த உத்தியோகத்தரால் சான்றுப்படுத்த முன் அவ்வதிகாரி பின்வருவனவற்றை உறுதி செய்தல் வேண்டும்:-

(அ) உப பிரிவு 2:1 இல் குறிப்பிடப்பட்ட எட்டில் 4 ஆம் கூட்டில் பதியப்பட்ட விபரங்களை பரீட்சித்தல்.

(ஆ) கொடுப்பனவுகள் சம்பந்தப்பட்ட உத்தியோகத்தரின் கடன் அட்டையிலும் அவரின் கோவையிலும் பதியப்பட்டதற்குரிய குறிப்புக்கள் எழுதப்பட்டு ஒப்பமிடப்பட்டுள்ளனவா:

(இ) இம் மீளளிப்பு முன்பு கொடுபடவில்லை என்பதற்கு நியாயமான வகையில் பரீட்சித்தல்.

(ஈ) இம் மீளளிப்பை தயாரித்தவரும், பரீட்சித்தவரும் இப் பொறுப்புக்கென அமர்த்தப்பட்டவர்களே என்பதையும், அவ்விரு உத்தியோகத்தரும் தமக்கொதுக்கப்பட்ட இடங்களில் ஒப்பம் இட்டிருக்கின்றனர் என்பதையும்,

இதன் பின் நிதி ஒழுங்கு 135 இன் கீழ் அதிகாரமளித்த உத்தியோகத்தர் பட்டியலை/ஆணைச்சிட்டையை சான்றுப்படுத்துவதுடன் எட்டின் 6 வது கூட்டிலும் ஒப்பமிடல் வேண்டும்.

2:13 சகல மீளளிப்புக்களும் ஒதுக்கீட்டுக் கணக்கு ஏட்டில் பதியப்படுதல் வேண்டும். சம்பந்தப்பட்ட பட்டியலோ/ஆணைச்சிட்டையோ இதில் பதியப்படுமுன் கொடுப்பனவுக்கான காசோலை தயாரிக்கப்படலாகாது. இவ் ஏட்டில் மாத இறுதியில் காணப்படும் கூட்டுத் தொகை, மாதாந்தம் திறைச்சேரிக்கு அனுப்பப்படும் கணக்குக் கோவையிலுள்ள " மீளளிப்பு கணக்கு - கடன் வழங்கு சபைகள் உதவுத் தொகை " என்பதுடன் சமமாக இருக்க வேண்டும். தொடர்ந்து ஒரே ஏட்டை மறுவருடத்திலும் பாவிப்பதுடன், இவ் ஏடு முடிவுற்றால் இதே போன்ற பிறிதொரு ஏட்டை தொடர்பு 11 என இலக்கமிட்டு பாவித்தல் வேண்டும்.

2:14 கடன் வழங்கு சபைகள் உதவுத் தொகை மீளளிப்புக்கள் யாவும் ( உதவுப் பணமும் ஆதாயப்பங்கும் ) கீழ் தரப்பட்ட கணக்கில் சம்பந்தப்பட்ட அமைச்சின்/திணைக்களத்தின் மாதாந்த கணக்குக் கோவையூடாக பதியப்படுதல் வேண்டும்.

" மீளளிப்புக் கணக்கு - கடன் வழங்கு சபைகள் உதவுத் தொகை "

திறைசேரி ஏடுகளில் இப்புதிய கணக்கு திறக்கப்பட்டிருக்கிறது.

2:15 எல்லா அமைச்சும்/திணைக்களங்களும் மாதாந்தம் கீழ் காணும் படிவத்தில் தமது உதவுத் தொகை மீளளிப்புகள் தொடர்பான விபரங்களை, பணிப்பாளர், கடன் வழங்கு சபைகள் திணைக்களத்திற்கு அனுப்புமாறு வேண்டப்படுகிறது.

| மொத்த அங்கத்தினர் எண்ணிக்கை | நடப்பு மாதம் மீளளிக்கப்பட்ட அங்கத்தினர் எண்ணிக்கை | மீளளிக்கப்பட்ட தொகை | | | மாதாந்த கணக்குக் கோவையில் உள்ளடக்கிய மாதம் | மீளளிப்புச் பெறவேண்டிய மீத அங்கத்தினரின் எண்ணிக்கை |
|---|---|---|---|---|---|---|
| | | உதவுத் தொகை | ஆதாயப் பங்கு | மொத்தம் | | |
| | | | | | | |

3. 1986 ஆம் ஆண்டு தை மாதம் 1 ஆம் திகதியும் அதற்குப் பின்பும் அரசாங்க சேவையிலிருந்து இளைப்பாறல், இறப்பு, பதவி நீக்கம் போன்ற காரணங்களுக்காக சேவையிலிருந்து நீங்கிக் கொண்ட உத்தியோகத்தர்.

3:1 இவ்வகை உத்தியோகத்தர்கள் தமது இளைப்பாறல், இறப்பு, பதவி நீக்கம் முதலியன நிகழ்கையில் கடமையாற்றிய அமைச்சு/திணைக்களங்களிலே உதவுத் தொகை மீளளிக்கப்படல் வேண்டும்.

3:2 இவ்வகை உத்தியோகத்தர்களின் பெயர் பட்டியலும், கொடுப்பனவுகளும் பதிவதன் பொருட்டு பிறிதொரு ஏடு கீழ் காணும் படிவத்தில் தயாரிக்கப்படல் வேண்டும்.

| 1 | 2 | 3 | 4 | 5 | 6 | | | 7 | 8 |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| அங்கத்தினர் பெயர் | அங்க இல | பதவிப் பெயர் | இளைப்பாறிய, இறந்த பதவி நீக்கப்பட்ட திகதி | வழிப்புரிமைக்காரின் பெயரும் விலாசமும் | மீளளிக்கப்பட்ட தொகை | | | மீளளித்த திகதி | உத்தரவளித்த உத்தி. ஒப்பம் |
| | | | | | உதவுத் தொகை | ஆதாயப் பங்கு | மொத்தம் | | |

3:3 1986 ஆம் ஆண்டு தை மாதம் 1 ஆம் திகதி முதல் சேவையிலிருக்கும் உத்தியோகத்தர்களுக்கு மீளளிப்புச் செய்வது தொடர்பாக பிரிவு 2 இல் விரிவாகக் காட்டப்பட்ட வழிவகைகள் அனைத்தும் இங்கும் கடைப்பிடிக்கப்படல் வேண்டும்.

3:4 மேலதிகமாக, இவ்வுத்தியோகத்தவர்கள் இளைப்பாறும் திகதியில் அல்லது இறக்கும் திகதியில் இருந்த அறவிடப்படாத கடன் நிலுவைகள், சம்பந்தப்பட்ட ஊழியர்களின் ஓய்வூதிய/பணிக்கொடை விண்ணப்பங்களில் சேர்க்கப்படாதிருக்கும் பட்சத்தில் அக்கடன் நிலுவைகள் யாவும் மீளளிப்புக் கொடுப்பனவிலிருந்து கழிக்கப்படுவதை சம்பந்தப்பட்ட அமைச்சு/திணைக்களம் உறுதி செய்தல் வேண்டும்.

3:5 இறந்த அங்கத்தினரின் கொடுப்பனவு அவரின் வழி உரிமைக்காரருக்கு கொடுக்கப்படும் இதற்காக கீழ்காணும் மேலதிக ஆவணங்கள் சமர்ப்பிக்கப்படல் வேண்டும்.

(அ) அங்கத்தினரின் இறப்புச் சான்றிதழ்.

(ஆ) அங்கத்தினரின் விவாகச் சான்றிதழ்.

(இ) தேவைப்படுமிடத்து பிள்ளைகளின் பெயரும் வயதும் அடங்கிய பட்டியலையும், பணத்துக்காக விண்ணப்பித்தவர் இறந்த அங்கத்தினரின் வழிமுறை உரித்தாளர் என்பதையும் அங்கத்தினர் வதியுமிடத்து உதவி அரசாங்க அதிபர் சான்றுப்படுத்திய பத்திரமும் இணைக்கப்பட வேண்டும்.

வயது வந்த பிள்ளைகள் தமது சம்மதத்தை எழுத்துமூலம் தெரிவிக்குமிடத்து கடன்- நிலுவைகள் இருப்பின் அவை கழிக்கப்பட்டபின், எஞ்சிய முழுத் தொகையும் கைம்பெண்/வாழ்விளந்தவருக்கு கையளிக்கப்படலாம். அல்லாவிடில் மீளளிப்புத் தொகையில் பாதி கைம்பெண்/வாழ்விளந்தவருக்கும் மறு பாதி சமமாக எல்லாப் பிள்ளைகளுக்கும் பகிர்ந்தளிக்கப்படும்.

3:6 1985 ஆம் ஆண்டு மார்கழி மாதம் 31 ஆம் திகதிக்கு முன் அரசாங்க சேவையிலிருந்து நீங்கிக் கொண்ட உத்தியோகத்தர்களுக்குரிய மீளளிப்பை அமைச்சு/திணைக்களம் மேற்கொள்ளக் கூடாது. இவர்களின் விண்ணப்பங்கள் யாவும் அவைக்குரிய ஆவணங்களுடன் ஆவன செய்வதற்காக கடன் வழங்கு சபை திணைக்களத்தின் பணிப்பாளருக்கு அனுப்பப்படல் வேண்டும்.

4. 1985 ஆம் ஆண்டு மார்கழி மாதம் 31 ஆம் திகதிக்கு முன், இளைப்பாறல் இறப்பு, பதவிநீக்கம் முதலான காரணங்களால் சேவையிலிருந்து நீங்கிக் கொண்ட உத்தியோகத்தர்கள்.

4:1 இவ் உத்தியோகத்தர்களுக்கான உதவுந் தொகை மீளளிப்புகள் தற்போது நடைமுறையிலுள்ளவாறு தொடர்ந்தும் கடன் வழங்கு சபை திணைக்களத்தினால் மீளளிக்கப்படும்.

4:2 இவ் உத்தியோகத்தர்களின் விண்ணப்பங்கள் ( எல்லா வகையிலும்ஏற்புடைய ) கடன் வழங்குசபை திணைக்கள பணிப்பாளருக்கு 31.03.1987 க்கு முன் கிடைக்கக் கூடியதாக அனுப்பி வைக்கும்படி சகல அமைச்சு/திணைக்களமும் உறுதிப்படுத்தல் வேண்டும்.

4:3 1986 ஆம் ஆண்டு மார்கழி மாதம் 31 ஆம் திகதி வரைகடன் வழங்கு சபை திணைக்களத்தினால் மீளளிக்கப்படும் உதவுத் தொகைகள் யாவும் தற்போது நடைமுறையிலிருப்பது போல் " மத்திய நிதியத்தில் " கணக்கு வைக்கப்படும். ஆனால் 1987 ஆம் ஆண்டு தைமாதம் 01 ஆம் திகதியில்

" மீளளிப்புக் கணக்கு - கடன் வழங்கு சபைகள் " என்ற கணக்கில் பதியப்படுதல் வேண்டும். அத்துடன் திறைசேரிக்கு மாதாந்தம் அனுப்பப்படும் கணக்குக் கோவையில் சேர்த்துக் கொள்ளல் வேண்டும்.

5. உடன் கணிப்புக்கள் :- ஆதாயப் பங்கீடு ரூபா 1/- முதல் ரூபா 100/- வரை இலகுவாக கணிப்பதற்கு ஏதுவாக உடன் கணிப்பு வாய்ப்பாடுகள் தயாரிக்கப்பட்டு இச்சுற்றறிக்கையின் பின்னிணைப்புகளாக ( 1 முதல் 4 வரை ) இணைக்கப்பட்டுள்ளன.

| | | | |
|---|---|---|---|
| 7.5 சத வீதம் | - | பின்னிணைப்பு | 1 |
| 7.2. சத வீதம் | - | " | 2 |
| 6.0 " | - | " | 3 |
| 2.5 " | - | " | 4 |

6. இம் மீளளிப்புக்களுக்கு தேவையான பணம் வழமைபோல் திறைசேரியிலிருந்து பெறப்படுதல் வேண்டும்.

7. உத்தியோகத்தரின் வேதனங்கள், எழுது கருவிகளின் செலவினங்கள் யாவும் சம்பந்தப்பட்ட அமைச்சு/திணைக்களம் தனது ஆண்டு மதிப்பீட்டில் ஒதுக்கப் பட்ட நிதியில் கணக்கிடுதல் வேண்டும்.

ஒப்பம் : டி.பி.ஐ.பீ.எஸ். சிறிவர்தன
செயலாளர்,
அரசாங்க நிருவாக அமைச்சு.

பிரதிகள் :- கணக்காளர் நாயகம்
திறைசேரி பிரதிச் செயலாளர்.

1987 ஆம் ஆண்டு தை மாதம் 01 ஆம் திகதி உத்தியோகத்தர் கடமையாற்றிய அமைச்சு/திணைக்களத்திற்கு சமர்ப்பிக்கப்படல் வேண்டும்

---

கடன் வழங்கு சபை அங்கத்தினர் உதவுத் தொகை மீளளிப்புக்கான விண்ணப்பம்

---

.................................... ஆகிய நான் -

(முழுப் பெயர்)

இல: ............ பதவிப் பெயர் ...................... இத்தால் எனது உதவுத் தொகை மீளளிப்பு விண்ணப்பிக்கிறேன். நான் .......... ஆண்டு/ ...................... அமைச்சில்/ திணைக்களத்தில் கடமையாற்றும் போது கடன் வழங்கு சபையில் அங்கத்தினரானேன். நான் பின்வரும் அமைச்சு/ திணைக்களங்களில் இன்று வரை கடமை புரிந்துள்ளேன்.

1.7.75 முதல் ..... வரை க.வ.ச இல: ...... அ/தி: ............

...... முதல் ..... வரை க.வ.ச இல: ...... அ/தி: ............

...... முதல் ..... வரை க.வ.ச.இல: ........ அ/தி : ..........

நான் இம்மீளளிப்பை முன்பு பெறவில்லை என்பதையும் இதுவே எனது முதல் விண்ணப்பம் என்பதையும் அறியத்தருகிறேன்.

திகதி: - விண்ணப்பதாரரின் ஒப்பம்

---

01.01.86 ஆம் அதன் பின்பும் இளைப்பாறிய இறந்த, பதவி நீக்கப் பெற்ற உத்தியோகத்தரின் பொருட்டு சம்பந்தப்பட்ட அமைச்சு/திணைக்களத்தினால் பூர்த்திசெய்யப் பட வேண்டியது.

---

01. உத்தியோகத்தர் பெயர் :-

02. பதவிப் பெயர் :-

03. இளைப்பாறிய / இறந்த திகதி :-

04. இளைப்பாறிய/இறந்த திகதியில் அறவிடப்படாத கடன் நிலுவை :-

திருவாளர்/திருமதி/செல்வி ....................

அங்கத்தினர் இல : ............. இடமிருந்த கடன்

வழுங்கு சபை இல ............ அமைச்சு/திணைக்களம்.

...................... அறவிடப் பெற்ற கடன்..

வழுங்கு சபை உதவுத் தொகைக்கான சான்றிதழ்.

| மாதம் | 1975 | 1976 | 1977 | 1978 | 1979 | 1980 | 1981 | 1982 | 1983 | 1984 | 1985 | கூட், தொ |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| தை | | | | | | | | | | | | |
| மாசி | | | | | | | | | | | | |
| பங்குனி | | | | | | | | | | | | |
| சித்திரை | | | | | | | | | | | | |
| வைகாசி | | | | | | | | | | | | |
| ஆனி | | | | | | | | | | | | |
| ஆடி | | | | | | | | | | | | |
| ஆவணி | | | | | | | | | | | | |
| புரட்டாசி | | | | | | | | | | | | |
| ஐப்பசி | | | | | | | | | | | | |
| கார்த்திகை | | | | | | | | | | | | |
| மார்கழி | | | | | | | | | | | | |
| கூட், தொகை | | | | | | | | | | | | |

இந்த அங்கத்தினரிடமிருந்து 19..... மாதம் ..... முதல். 19 ..... மாதம் ........ வரை அறவிடப் பெற்ற மாதாந்த உதவுத் தொகையின் கூட்டுத் தொகை ரூபா .......( ............. - - ............) என்பதை சான்றுப்படுத்துகிறேன்.

திணைக்களத் தலைவர் அல்லது உத்தரவளித்த
உத்தியோகத்தரின் ஒப்பம்.

திகதி :-

5. கடன் நிலுவைகளை அறவிட மேற்கொள்ளப்பட்ட முயற்சி :-

6. கோவை இலக்கம் :-

* எவ்வித கடன் நிலுவையுமில்லை / தயை கூர்ந்து ரூபா ............... கடன் நிலுவை அறவிடவும்.

அமைச்சு / திணைக்கள தலைவர்

அல்லது

அதிகாரமளித்த உத்தியோகத்தர்.

திகதி :-

* அமைவுடையல்லாததை நீக்கவும்.

படிவம் __ அ_3

கடன் வழங்கு சபைகள் உதவுத் தொகை மீளளித்தல்
கணக்கும் அட்டை

உத்தியோகத்தர் பெயர் :-

கடன் வழங்கு சபை அங்கத்தினர் இல :-

பதவிப் பெயர் :-

| (1) அமைச்சு/ திணைக்களம் | (2) ஆண்டு | (3) 7ம் கூட்டில் உள்ள தொகை முன்கொண்டு வரல் | (4) ஆண்டுக்குரிய உதவுத் தொகை | (5) ஆண்டிறுதி கூட்டுத் தொகை (3+4) | (6) வருட ஆதாயப் பங்கு | (7) மொத்தம் (5+6) |
|---|---|---|---|---|---|---|
| | 1975 | இல்லை | 100.00 | 100.00 | 7.50 | 107.50 |
| | 1976 | 107.50 | 125.00 | 232 50 | 16 70 | 249 20 |
| | 1977 | 249 20 | 250 80 | 500 00 | 30 00 | 530 00 |
| | 1978 | 530 00 | | | | |
| | 1979 | | | | | |
| | 1980 | | | | | |
| | 1981 | | | | | |
| | 1982 | | | | | |
| | 1983 | | | | | |
| | 1984 | | | | | |
| | 1985 | | | | | |
| மொத்தம் | | | | | | |

தயாரித்தவர் ஒப்பம் :-

பரீட்சித்தவர் ஒப்பம் :-

இந்த உத்தியோகத்தவர் முன்பு உதவுத் தொகை மீளளிப்பை பெறவில்லை யென்பதையும், இக்கொடுப்பனவு ஏற்புடையதானதால் ரூபா .................... கொடுப்பனவை அங்கீகரிக்கிறேன்.

அமைச்சு/திணைக்கள தலைவர்
[illegible] உத்தியோகத்தர்.